**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 ம் நாள் புதன்கிழமை**

**O.S. 81/2022**

**வா.சா.1**

**ராமதாஸ், த/பெ. சிவசுப்பிரமணியன்**

**முதல் விசாரணை தொடர்ச்சி தொடர்ச்சி** :

**(கடந்த 22.04.2022 ம் தேதியிட்ட எனது தகப்பனார் பெயரில் ஏற்பட்ட நத்தம் நிலவரி திட்டத்தின்கீழ் ஏற்பட்ட மனைவரி பட்டா (உண்மை நகல்) (1, 2 பிரதிவாதிகள் தரப்பு ஆட்சேபணையுடன்) வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 22.04.2022 ம் தேதியிட்ட எனது தகப்பனார் பெயரில் ஏற்பட்ட நத்தம் நிலவரி திட்டத்தின்கீழ் ஏற்பட்ட தூய சிட்டா (உண்மை நகல்) (1, 2 பிரதிவாதிகள் தரப்பு ஆட்சேபணையுடன்) வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** கடந்த 27.03.2013 ம் தேதியிட்டு வழங்கப்பட்ட எனது தகப்பனார் சிவசுப்பிரமணியன் இறப்பு சான்றிதழ் நகல் தாக்கல் செய்யப்படுகிறது. கடந்த 16.09.2014 ம் தேதியிட்டு வழங்கப்பட்ட எனது தாயார் பட்டம்மாளின் இறப்பு சான்றிதழ் நகல் தாக்கல் செய்யப்படுகிறது. கடந்த 21.10.2014 ம் தேதியிட்ட எனது தகப்பனாரின் வாரிசு சான்று நகல் தாக்கல் செய்யப்படுகிறது. **(கடந்த 13.10.2021 ம் தேதியிட்டு நான் திருவாரூர் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அனுப்பிய கடிதம் அலுவலக நகல் ஒப்புதல் அட்டையுடன் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 17.03.2023 ம் தேதியிட்ட நான் திருவாரூர் மருத்துவக்கல்லூரி**

மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான மருத்து விடுவிப்பு சான்று (அசல்) வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 05.05.2022 ம் தேதியிட்டு திருவாரூர் தாலுக்கா காவல்நிலையத்திலிருந்து பெறப்பட்ட அழைப்பாணை மற்றும் நான் அளித்த புகாருக்கான மனு ரசீது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 23.05.2022 ம் தேதியிட்ட நான் மாவட்ட ஆட்சியருக்கு கொடுத்த புகார் நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 10.03.2022 ம் தேதியிட்டு நான் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் அனுப்பிய தகவல் விண்ணப்பம் நகல் அஞ்சலக ஒப்புகை அட்டையுடன் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 20.06.2022 ம் தேதியிட்ட நான் திருவாரூர் வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிய கடிதம் அலுவலக நகல் (மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பிய கடிதம் பெறப்பட்டதற்கான ஒப்புதல் அட்டையுடன்) வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 07.10.2022 ம் தேதியிட்டு நான் எனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 11.10.2022 ம் தேதியிட்டு மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பினை பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் (எண்ணம் 5) வா.சா.ஆ.10 ன் வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது). (தாவா சொத்திற்கான அரசு வழிகாட்டி மதிப்பு

**கணினி நகல் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (எனது ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.**

ஒம் /- S. விஜய் ஆனந்த்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாரூர்.